# திராவிடக் காப்பியமும் போர்க்களமும்

*ப. மணிகண்டன்*
*மொழித்துறை, உதவிப் பேராசிரியர்*
*பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி*
*கோவை*

**முன்னுரை**

பண்டைய தமிழரின் தனித்த அடையாளம் அகமும், புறமும் ஆகும்.புறவாழ்வு தமிழரின் வீரத்தினை எடுத்துக்காட்டும் வாழ்வாகும்.அத்தகைய வாழ்விற்கு அடிப்படையாக அமையும் போர்முறையினைக் காப்பியங்கள் எவ்வாறு கூறுகின்றன என்பதைக் காண்பதாக அமைகின்றது.

**காப்பியமும் போரும்**

தமிழ்க் காப்பியங்களில் போர்க்காட்சிகள் நன்மைக்கும், தீமைக்கும் இடையிலான போர்முறையையே பேசுகின்றன. ஐம்பெருங்காப்பியங்களில் சிலம்பில் சேரன் செங்குட்டுவன் வடநாட்டு மன்னர்களுடன் குறிப்பாகக் கனக விசயருடன் போரிடுகிறான்.

பெருங்கதையில் உதயணன் உஞ்சை அரசன் பிரச்சோதனுடன் போரிடுகிறான். வாசவதத்தையைக் கடத்திக் கொண்டு கோசம்பி நகர் வரும் வழியில் வேடர்களுடன் போரிடுகிறான். மேலும் உதயணன் கங்க மன்னர் போர், உதயணன் - ஆருனி அரசனுடன் போர் போன்றனவும் சீவக சிந்தாமணியில் ஐந்து போர் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.முதல்போர் ஏமாங்கத நாட்டு அரசன் சச்சந்தனுடன் அமைச்சன் கட்டியங்காரன் சூழ்ச்சி செய்து போரில் வென்று தானே அந்நாட்டு அரசனாக முடிசூட்டிக் கொள்வது. இரண்டாவது நந்தகோனின் ஆநிரைகளை வேடர்கள் கவர்ந்து செல்ல, அவ்வேடர்களுடன் கட்டியங்காரன் படை நிகழ்த்தும் போராகும்.இவ்வேடர்களுடன் சீவகன் போரிட்டு நிரை மீட்பது மூன்றாவது போராகும்.அடுத்தது சீவகன் காந்தருவதத்தை சுயம்வரத்தில் தோற்ற அரசர்களுடன் நிகழ்த்துவது. இறுதியாக சீவகன் கட்டியங்காரனுடன் நிகழ்த்தும் போராகும்.

சூளாமணியில் காப்பியத் தலைவன் திவிட்டனுக்கும் அச்சுவகண்டனக்கும் இடையும் நடப்பதை எடுத்துரைக்கிறது.

**போர்களும் நோக்கமும்**

காப்பியப் போர் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கென ஒரு நோக்கமும் குறிக்கோள்களும் உண்டு. செங்குட்டுவனின் வடநாட்டுப் போருக்கான நோக்கங்கள் இரண்டு. ஒன்று பத்தினிக் கடவுளுக்கு இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்வது இரண்டாவது தமிழ் வேந்தர் தம் ஆற்றலை இகழ்ந்த வட ஆரிய வேந்தர்க்குத் தமிழ் வேந்தர்தம் திறத்தினை எடுத்துக் காட்டுவதாகும்.இது செங்குட்டுவன் கூற்றாகவே சிலம்பு எடுத்துரைக்கிறது.

> **“பால குமரன் மக்கள் மற்றவர்**
> **காவா நாவிற் கனகனுடன் விசயனும்**
> **விருந்தின் மன்னர் தம்முடன் கூடி**
> **அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனச்**
> **சீற்றங் கொண்டிச் சேனை செல்வது’ (சிலப். 26.158-62)**

பெருங்கதைப் போருக்கும் இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு. ஆருணி அரசனிடமிருந்து இழந்த தனது நாட்டைப் பெறுவதே உதயணன் செய்யும் பல போருக்கு முக்கியக் காரணமாகும். கங்க வேந்தர்கள் மகத நாட்டு அரசன் தருசகன் மேல் போரிட வர உதயணன் தருசகனுக்குத் துணையாகப் போர் புரிவது, பின்னர் தான் ஆருணி அரசனுடன் தொடங்கும் போருக்குப் படைத்துணை பெறுவதே எனலாம்.அடுத்தது மாய யானை காட்டிச் சூழ்ச்சியால் தன்னைச் சிறைபிடித்த பிரச்சோதனனை யூகியின் சூழ்ச்சித்திறனால் பழி வாங்குவதாகும்.

பெரும்பாலான போர்கள் மண்ணாசை மற்றும் பெண்ணாசையால் ஏற்படுவதாகும். சூளாமணிப் போர் பெண்ணை மையப்படுத்துவதாகும். வித்யாதரப் பெண் சுயம்பிரபையை. அவள் தந்தை சுவலனசடி நிலவுலக அரசன் பயாபதி மகன் திவிட்டனுக்குத் திருமணம் செய்து கொடுக்க அதன் விளையே அவளை அடைய விரும்பிய வித்தியாதரர் பேரரசன் அச்சுவகண்டன் திவிட்டனுடன் போர் தொடுப்பதாகும்.

சீவக சிந்தாமணியில் சச்சந்தன் - கட்டியங்காரன் போர் அரசியல் காரணமாக ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் அமைகின்றது. மேலும் அரசன் காமமே வாழ்க்கை என இருக்கக் கூடாது அவரது கவனம் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுவதாய் அமைகின்றது.

சூழ்ச்சியும் கட்டியங்காரனின் ஆசையும் காப்பியத்தின் இறுதிப் போருக்கான காரணமாகின்றது. மண்ணாசை – பெண்ணாசை – பொன்னாசை கூடாது என்பதே காப்பியங்களில் பொதுவான கருவாய் உள்ளன. அதனோடு இளமை, செல்வம், யாக்கை நிலையாமையை உணர்த்தவும் அறம் வளர வேண்டும் என்பதை வலியுறுத்தக் காப்பியப் போர்க் காட்சிகள் இடம் பெறுகின்றது.

**போர்க் காட்சியும் கற்பனையும்**

காப்பியங்களில் போர் வருணனை மிகுந்த கற்பனை நயத்துடன் கூறப்படுகின்றது. பெருங்கதை தமிழர் வீரமரபிற்கு மாறாகச் சூழ்ச்சிப் போரை, படை மறவர்கள் பாசறையில் துயில் கொண்டிருந்த போது போரிட்டு அழிப்பதைப் பேசுகிறது. மாயப் போர் குறித்தும் கூறுகின்றது. மாயத் தேவதையான ‘சண்டவேகை’ அச்சுவகண்டனால் அனுப்பப்படுவது சூளாமனியில் இடம் பெறுகிறது.இவள் மலையை உருட்டவும் அதனைத் தீயினால் எரிக்கவும், அதனைச் சாம்பல் ஆக்கிக் கடல் நீரில் கரைக்கவும் ஆற்றல் பெற்றவள் என்றும் மேலும் அவள் பெரிய மலையைத் தூக்கிச் சூரிய ஒளியை மறைத்து உலகினை இருளடையச் செய்யும் காட்சி கற்பனையின் சிறப்பாகும்.

திவிட்டன் இக்காப்பியத்தில் திருமாலின் அவதாரமாகச் சித்தரிக்கப்படுகிறான்.அவன் போரைத் தொடங்க கழுத்தில் வெண்ணிறம் கொண்ட கருடன் வான்வழி வந்து அவன் வாகனமாகிறது. திவிட்டன் - அச்சுவகண்டன் போரில் பாம்பு, பருந்து, நெருப்பு, மழை மற்றும் வட்டு முதலான கணைகள் வீசப்படுகின்றன.அதோடு அம்பு ஒன்று ஒருவரைத் தூங்கவும் எழுப்பவும் ஆற்றல் பெற்றதாக அமைகின்றது.

வானில் பறந்து சென்று வீரர்கள் போரிடும் காட்சிகளும் இடம்பெறுகின்றன. திவிட்டன் கருட வாகனம் ஏறி வானில் பறந்து சென்று அங்கு வாழும் அச்சுவகண்டனுடன் போரிடுகின்றான்.

**போர்முறையும் வழிபாடும்**

போரைத் தொடங்கும் முன் இறைவழிபாடு செய்தல் பற்றி சீவகசிந்தாமணி எடுத்துரைக்கிறது. அறவழியில் நேர்மையான முறையில் போர் செய்வதை சிலம்பு. சூளாமணி சிந்தாமணி போன்ற காப்பியங்கள் கூறுகின்றன. சிலப்பதிகாரத்தில் போர்க்களத்தில் தோற்ற வீரர்கள் சடைமுடியுடன் காவியணிந்து திருநீறு பூசித்துறவுக் கோலம் பூண்டு எவ்வித அச்சமும் இன்றி திரிந்தனர். அவர்கள் மேல் செங்குட்டுவன் படை எவ்வித தாக்குதலையும் நிகழ்த்தவில்லை என்பதை கூறுகின்றது.

> **“செங்குட்டுவன்தன் சினவலைப் படுதலும்**
> **சடையினர் உடையினர் சாம்பாற் பூச்சினர்**
> **பீடிகைப் பிலிப் பெருநோன் பாளர்”          (சிலம்பு – கால்கோட் காதை 224 -226)**

சீவக சிந்தாமணியில் ஆயுதம் இழந்தவருடனும் ஒத்த ஆயதங்கள் இல்லாருடனும் போர் செய்யக் கூடாது, அதே போல் எதிரி போரிட வராத போது அவரைத் தாக்குவதும் கூடாது என்று கூறுகிறது. சூளாமணி போரில் அஞ்சுபவர்கள் விலகிச் செல்க, ஆற்றல் மிக்க, போரிடவல்ல மறவர் மட்டுமே போரிட வருக, குழந்தைப் பேறு இல்லாதவர் போரிட வரவேண்டாம் அறநெஞ்சு கொண்டவர் அகல்க, புறமுதுகிட்டுப் போர்க்களத்தில் திரிவார் வெட்கப்பட வேண்டும், அவர்கள் மதிக்கப்படார் என்று கூறுகிறது.

போர் நிகழ்ச்சிகளில் நன்மை வெல்லும், தீமை அழியும், நேர்வழியில் நடத்தப்பெறும் போரே வெற்றி தேடித்தரும். கட்டியங்காரனை வென்று இறுதிப் போரைச் சீவகன் முடிக்கத் தோற்ற கட்டியங்காரன் வாயிலாக இவ்வறத்தைக் கூறுகின்றார்.

**"நல்வினை உடையநீரார் நஞ்சுணின் அமுதாமாகும்**
**இல்லையேல் அமுதும் நஞ்சாம் இன்னதால் வினையின் ஆக்கம்**
**கொல்வல்யான் இவனை என்றும் இவன் கொல்லும் என்னை என்றும்**
**அல்லன நினைத்தல் செல்லார் அறிவினால் பெரிய நீரார்" (சிந். 2314)**

போரில் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவது என்பது இயற்கை. கொல்லாமையே அறம் என்பதும் உண்மை. ஆனால் கொலையில் கொடியாரை வேந்தன் கொல்லுதல் பாவம் அல்ல என்கிறது குறள். எனினும் உயிர்க்கொலை பாவம் என்பதால் அது போக்க அருகவழிபாடு செய்வதைச் சிந்தாமணி குறிப்பிடுகின்றது.

**போர்க்களம்**

போர்க் காட்சியில் மறவர்கள் போரிடுவது உழவர்கள் நிலத்தை உழும் காட்சியுடன் சிலம்பு ஒப்பிடுகின்றது. யானை தன் தந்தங்கள்கொண்டு நிலத்தை உழும் எருமைகளாகவும் வாளும் கோலும் எருமைகள் ஓட்டும் சாட்டையாகவும், பகைமறவர்கள் நெல்வயல் உழப்படுகிறபோது அழியும் புல் முதலானவையாகவும் செங்குட்டுவன் உழவனாகவும் காட்டுகிறது.

**கச்சையானைக் காவலர் நடுங்கக்**
**கோட்டுமாப் பூட்டி, வாட்கோல் ஆக**
**வாளேர் உறவன், மறக்களம் வாழ்த்தித்**
**தொடியுடை நெடுங்கை தூக்கத் தூக்கி (சிலம்பு 26.231-34)**

போர்க்காட்சியில் நாற்படைகளின் அழிவு, குருதி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுதல், தூசி படர்தல் தலையற்ற முண்டங்களின் ஆடல், நரிகளின் ஊளை, இசைக் கருவிகளின் போரொளி போன்றவை விவரிக்கப்படுகிந்றன.

போர்க்களத்தில் பறை, சங்கு, கொம்பு, முரசு, முழவு, பணை, பம்பை, சிறுபறை, நீண்ட பறை, இயமரம், ஒற்றை குழல், வயிர் போன்ற இசைக்கருவிகளின் முழக்கம் எங்கும் நிறைந்திருந்தன. படைவீரர்களின் ஆரவாரமும் யானைகளின் பிளிறலும் பேர்க்களம் முழுவதும் இடிமுழக்கம் செய்தன என்கிறது.

வீரர்கள் வெட்டி வீழ்த்திய குதிரைகள் கடல் அலையாகவும் அரச வெண்கொற்றக் குடைகள் கடல் நுரையாகவும், யானைகள் கடற்கரையாகவும் காட்சியளித்ததாகச் சூளாமணி கூறுகிறது. யானையின் மேலிருந்து கீழிறங்கும் மறவர்கள் வானிலிருந்து நிலம் இறங்கும் காட்சியை ஒத்தது. அம்புகள் தைக்கப்பட்ட யானைகளைப் பறவைகள் நிறைந்த மலையாகச் சிந்தாமணி எடுத்துரைக்கிறது.

போரில் வீழ்ந்த யானை நதிக்கரையையும், நொறுக்கப்பட்ட தந்தம் வெண்மலர் இதழ்களையும், வட்டுதுளைத்த யானையின் நெற்றிப்பட்டம் மேகத்தில் மறையும் நிலவையும் கதையில் அடிபட்டு மலையில் வீழ்ந்த மின்னலையும் ஒத்தனவாக சூளாமணி சித்தரிக்கிறது.

சிந்தாமணி குருதி வெள்ளத்திலிருந்து போரிடும் மறவர்களை ஆற்றில் நீராடுவதாகவும் வெட்டுண்ட மறவர்தம் கால் கடலில் நீந்தும் மீனாகவும். குருதிவெள்ளம். இக்கொடிய போரைக் காணச்சகிக்காத நிலமகள் போர்த்திய செவ்வாடையாகவும் காட்சியளிக்கின்றன என்கிறது.போரிடும் போது எழும் தூசி பற்றி சிலம்பும் பெருங்கதையும் புளுதியும் குருதியும் கலந்து சகதியாகி செவ்வானமாகக் காட்சியளித்ததாக கூறுகின்றன.

போரில் அம்பு எய்வதை மழைத்துளியாகச் சூளாமணி காட்டுகிறது அவை சூரியனின் கதிர்களை மறைந்தன. கொடுங்கொல் அரசனின் படைக் கலனைச் சிதைத்து, அவர்களது நெஞ்சில் பாய்ந்து இதயத்தைத் துளைத்துக் கொன்றன. பகைவர் வில் நான் சிதைக்க அது தூண்டில் நூலாகக் காட்சியளித்தது.

**முடிவுரை**

காப்பியங்கள் போர்களக் காட்சியைப் பலவாறு கற்பனை நயத்துடனும் அரசர்களின் வெற்றி, வீரர்களின் போர்த்திறன் போன்றவற்றைச் சிறப்புடன் எடுத்துக் காட்டுவதை அறியலாம்.